# பாடசாலைகளில் ஆவணப்படங்களுக்கு இடம் வேண்டும்



**தர்ஷினி ராதாகிருஷ்ணன்**

**உரையாடல்- செ.திவாகரன்**

***மு**க்கிய நிகழ்வுகளை ஆழமாகவும் சுவாரஸ்யம் குறையாமலும் சொல்வதில் ஆவணப்படங்கள் முக்கியமாகத் திகழ்கின்றன.*


*சமகால பெண்களின் உடல் மற்றும் உள ரீதியில் பிரச்சினையிலுள்ள நியாய தர்மத்தின் அடிப்படையை மையமாக வைத்து உருவாகும் ஆவணப்படங்கள் பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பை கண்டிப்பாகப் பெறும்.*

*அந்தவகையில் உருவாக்கப்பட்ட ஆவணப்படமே ‘கசிவு'. பெண்கள் மத்தியில் மட்டுமல்லாமல், சமூகத்தில் சிறந்த விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது குறித்த அவரது படைப்பு,*

*ஊடகக்கற்கைகள் துறையில் ஒன்றை சாதிக்க வேண்டும் என்று ஆர்வத்தில் எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் இளம் யுவதி. துறைசார் விடயங்கள் குறித்து உரையாடியபோது அவர் எம்முடன் பகிர்ந்துகொண்ட விடயங்கள் எமது வாசகர்களுக்காக...*

**'கசிவு' ஆவணப்படம் பற்றிய உங்களின் தெளிவுபடுத்தல் என்ன?**

மலையகப் பெருந்தோட்டத்தைப் பொறுத்தமட்டில் 200 வருட காலத்தைக் கடந்தும் இன்றளவும் அவர்கள் அடிப்படைத் தேவைகளுக்காகவும் அத்தியாவசியமானவற்றுக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சமூகம் தான். அவற்றில் ஒருசில விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளாவது இடம் பெறுகின்றன. ஆனால், அவற்றில் பேசுபொருளாக காணப்படும் ஒன்றுதான் பெண்களின் மாதவிடாய் கால அவலங்கள். பலராலும் ஒரு பிரச்சினையாகவே கருதாத தேயிலைத் தோட்டப் பெண்களின் மாதவிடாய் கால அவலங்களைக் கூறுவதே ‘கசிவு' ஆவணப்படமாகும்.



**'கசிவு' என்ற ஆவணப்படத் தலைப்புக்கு என்ன அர்த்தம்?**

தேயிலைத் தோட்டப் பெண்களின் மாதவிடாய் கால நிகழ்வு எப்படி இருக்கின்றதோ அதைப்போலதான் பலருக்கும் தெரியாமல் மலையகப் பெருந்தோட்ட மக்களின் அவஸ்தைகள் பிறர் அறியாவண்ணம் கசிந்துகொண்டிருக்கின்றன.

அதனை வெளிப்படுத்தும் வண்ணம் ‘கசிவு' என்ற தலைப்பை தெரிவுசெய்தேன்.

**இந்த ஆவணப்படத் தயாரிப்பில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்னென்ன?**

உண்மையிலேயே திரையில் தோன்றுபவர்களை ஒத்துக்கொள்ள வைப்பதில் பெரும் சிரமப்பட்டேன். பெண்கள் அனைவருக்கும் இயல்பான - இயற்கையான ஒரு விடயம்தான் மாதவிடாய் என்பதை பலரும் இன்றளவும் சாதாரணமாக எடுத்துக் கொள்வதில்லை. ஆக, தேயிலைத் தோட்டப் பெண்கள் இவ்விடயத்தை வெளிப்படுத்த அச்சப்படுகின்றனர்.

அதுபோலவே இதனை என்னிடம் பேசவும் அச்சம் கொண்டனர் இதனையே நான் பெரும் சவாலாக நினைக்கிறேன் .

> **நானுஓயாவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் தர்ஷினி ராமகிருஷ்ணன். உயர்நிலைக் கல்வியை நானுஓயா நாவலர் கல்லூரியில் கற்றவர். தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக்கற்கைகள் துறையில் நான்காம் வருட மாணவியாகக் கற்றுக்கொண்டிருப்பவர்.**

**பெரிதும் பேசப்படாத ஒரு விடயத்தை நீங்கள் தெரிவுசெய்து அதனை வெளிப்படுத்துவதற்கு உங்களைத் தூண்டிய விடயம் என்ன?**

என்னுடைய அம்மா ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி. சிறுவயதிலிருந்தே இவற்றையெல்லாம் பார்த்துதான் நான் வளர்ந்தேன். ஒரு பெண்ணாக தேயிலைத் தோட்டப் பெண்களைக் கண்டு நான் வியந்துள்ளேன். அவர்களின் கடின உழைப்பும் கஷ்டங்களும் ஏன் கண்டுகொள்ளப்படவில்லை என்ற கேள்விக்குமான பதில்தான் இந்த ஆவணப்படம்.

**இந்த ஆவணப்படம் தொடர்பிலான சமூக அங்கீகாரம் எப்படி உள்ளது?**

உண்மையில் நான் நினைத்ததற்கு அதிகமாகவே அங்கீகாரம் கிடைத்துள்ளது. மிகப்பெரிய ஒரு சமூகப் பிரச்சினைகளை அடையாளப்படுத்திய மன திருப்தி உள்ளது. அதற்கும் மேலாக சமூக ஊடகங்களில் இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. இதற்கும் மேலாக பெண்கள் அமைப்புகள், சுவிஸ் போன்ற வெளிநாடுகளிலுள்ள சமூக நலன் சார்ந்த அமைப்புகள் அவர்களின் நாடுகளில் இவ் ஆவணப்படத்தை திரையிட்டுள்ளன. தேயிலைத் தோட்டப் பெண்களின் அவஸ்தைகள் மற்றும் அது தொடர்பிலான மாற்று வழிகள் தொடர்பில் சிந்திக்க ஆரம்பித்துள்ளன. தற்பொழுது ஒரு பேசுபொருளாக தேயிலைத் தோட்டப் பெண்களின் மாதவிடாய் கால அவஸ்தைகள் மாறிவிடுவதைக் காணும்போது மனநிறைவாக இருக்கிறது.

**இவ் ஆவணப்பட உருவாக்கும் மூலம் நீங்கள் எதிர்கொள்ளும் சமூக மாற்றங்கள் என்ன ?**

தேயிலைத் தோட்டப் பெண்கள் மாதவிடாய் காலத்தில் குறுகிய கால ஒய்வுகளை எடுக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் கொண்டுவரப்பட வேண்டும். தேயிலை மலைகளில் ஆங்காங்கே மலசலகூட வசதிகள் இருக்குமானால், அவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். இவற்றிற்கெல்லாம் மேலாக தேயிலைத் தோட்டப் பெண்கள் தங்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். குடும்ப ஆண்களும் பெண்களின் இவ்வாறான நேரத்தில் உதவியாக இருக்க வேண்டும்.

**உண்மையை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் ஓர் ஆவணப்பட இயக்குநருக்கு இருக்கும் சவால்கள் என்ன ?**

மிகவும் முக்கியமான ஒரு கேள்விதான். ஏனென்றால், ஊடக நுகர்வாளர்கள் பெரும்பாலும் எதிர்பார்ப்பது பொழுதுபோக்கு மற்றும் சுவாரஸ்யமான அம்சங்களைத்தான். ஆனால், இவற்றுக்கு முற்றிலும் வேறுபட்டதுதான் ஆவணப்படம். ஆவணப்படம் என்பது முழுக்க முழுக்க உண்மைகளை வெளிப்படுத்தும் ஓர் ஊடகப் பரிமாணமாகும். இவற்றில் சுவாரஸ்யமோ கற்பனையோ காணப்படாது பெரும்பாலும் மனதை உலுக்கக்கூடிய - மனிதாபிமானத்தை தட்டியெழுப்பக்கூடிய ஒன்றாக ஆவணப்படம் இருப்பதால் மக்கள் மத்தியில் ஆவணப்படத்தைக் கொண்டுசெல்லுவதும் அவற்றை நிலை நிறுத்துவதும் ஆவணப்பட இயக்குநருக்கு மிகவும் சவாலாகவே இருக்கிறது. ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி மக்களிடத்தில் ஒரு ஆவணப்படம் தொழிற்பட ஆரம்பிக்கின்றது. ஆமாம். சமூக மாற்றங்களை ஆவணப்படம் ஏற்படுத்துகிறது என்பதுதான் உண்மை.

**மலையகத்தில் ஆவணப்படத்துறை எந்தளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது ?**

மலையகத்தில் என்று கூறும்போது ஆவணப்படத் துறை இன்னும் போதுமான வளர்ச்சியை அடையவில்லை என்றே சொல்வேன். காரணம், ஆவணப்படம் என்கிற கலை வடிவத்துக்கு இன்னும் போதுமான ஆதரவு இல்லை. குறிப்பாக, ஆவணப்படம் என்றால் அது ஒரு பிரச்சினையை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்று நம்மிடையே இருக்கும் குறுகிய பார்வை கூட அதற்குக் காரணமாக இருக்கலாம். எதைப் பற்றியும் ஆவணப்படம் எடுக்கலாம் என்பதை யாவரும் உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்தால் ஏராளமான ஆவணமாகப் பதியலாம்.

ஏனைய பகுதியில் அல்லது நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் ஆவணப்படத் துறையில் மிகவும் பின்தங்கியுள்ளோம். சொற்பமான எண்ணிக்கையிலேயே ஆவணப்படங்கள் வருகின்றன. அவற்றைத் திரையிடுவதற்கான தளங்களும் நம்மிடம் மிகக்குறைவாகவே உள்ளன.

**ஆவணப்படம் எடுப்பதற்குப் பயிற்சி அவசியமா ?**

ஆவணப்படமொன்றை சிறப்பாக எடுக்க நிச்சயம் பயிற்சி அவசியம். அதாவது, ஊடகங்கள் தொடர்பில் தெரிந்து வைத்திருக்க வேண்டும். கையாளும் வார்த்தைகளின் வரையறைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். படப்பிடிப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கக்கோவைகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். தகவல் வழங்குனரின் உரிமைகள், கடமைகள் தொடர்பில் அறிந்து வைத்திருக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாக ஓர் ஆவணப்படத்தை செம்மையாக்கம் செய்வதில் காணப்படக்கூடிய தொழில்நுட்ப அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஆவணப்படம் தொடர்பான சிறந்த பயிற்சி பெற்றுக்கொண்டு ஆவணப்படத்தை இயக்கும்போது நிச்சயம் நல்லதோர் ஆவணப்படத்தை உருவாக்க முடியும். ஆனால், ஆவணப்படத்தின் மீதுள்ள ஈர்ப்பும் மிக மிக அவசியமான ஒன்றாகும்.

**சிறந்த திரைப்படங்களைப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் திரையிடும் அதேநேரம் ஆவணப் படங்களை பாடசாலைகளில் திரையிட முடியாதா ?**

நிச்சயமாக சிறந்த திரைப்படங்களைப் பாடசாலை மாணவர்களிடையே திரையிட வேண்டும். காரணம், சமூக அரசியல் நற்கருத்துகளை காட்சி வழியில் மாணவர்களுக்குப் புகட்டும்போது நல்லதோர் எதிர்கால சந்ததியைக் கட்டியெழுப்ப முடியும். மாணவர்களிடையே ஆக்கபூர்வமான சிந்தனைகள் எழ இது ஒரு வாய்ப்பாக அமைகிறது. சமூகப் பிரச்சினைகளை மாணவர்கள் அடையாளம் கண்டுகொள்ளும் திறன் வளரும். சமூகம் சார்ந்த எண்ணங்கள் சிறு வயது முதலே மாணவர்களிடையே ஏற்பட ஆரம்பிக்கும். நிலையான அபிவிருத்தியைப் போன்றதொரு விடயத்தின் அத்திபாரமாய் இச்செயற்பாடு நிச்சயமாகக் காணப்படும்.

**ஆவணப்படம் எனும் வடிவத்தை நீங்கள் தெரிவுசெய்ய என்ன காரணம்?**

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைபோன்று உண்மைகளைப் படம் பிடிப்பதும் அவற்றை வெளிப்படுத்துவதுமே ஆவணப்படமாகும். தேயிலைத் தோட்டப் பெண்களின் மாதவிடாய் கால அவலம் என்பது உண்மையான ஒரு சமூகப் பிரச்சினை. இப்பிரச்சினையை ஏனைய ஊடக வடிவங்களில் வெளிப்படுத்தியிருந்தால் நிச்சயம் அதில் கற்பனையும் மிகைப்படுத்தும் உட்சேர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கும். எந்தவொரு விடயத்தையும் மிகைப்படுத்தவும் கூடாது. அதேசமயம், யாரும் முகம் சுளிக்கவும் கூடாது என்ற வகையில் காட்சிப்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய அடிப்படை எண்ணம். இதற்கு ஒரு பொருத்தமான ஓர் ஊடக அம்சமாக ஆவணப்படம் காணப்படும் என்பதுதான் உண்மை. இவற்றுக்கும் மேலாக பலராலும் கையாளப்படாத பலருக்கும் தெளிவில்லாத ஓர் ஊடக அம்சம்தான். ஆவணப்படம் உண்மையான சமூகப் பிரச்சினையை மிக எளிமையாக மக்களிடத்தில்



கொண்டுசேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆவணப்படத்தை தெரிவுசெய்தேன்.

**ஆவணப்படத்தைக் கடந்து வேறேதும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்களா?**

ஆமாம். ஊடகக் கற்கைகள் துறை பாடங்களில் தினம் தினம் புதுப்புது விடயங்களை கற்றுக் கொண்டிருக்கின்றேன். அந்த வகையில் சில ஆவணப்படங்களைத் தயாரித்துள்ளேன்,

சில மலையகப் பிரச்சனைகளை அடையாளப்படுத்தும் பத்திரிகைசார் கட்டுரைகளை எழுதியுள்ளேன். மோஜோ வீடியோ மூலம் சமூகப் பிரச்சினைகள் சிலவற்றை அடையாளப்படுத்தியுள்ளேன். புகைப்படக் கலையிலும் எனக்கு ஆர்வம் உண்டு. மலையகம் சார்ந்த வாராந்த வட்டி கடன் சார்ந்த பிரச்சினையைக் கொண்டுவரும் வகையில் குறும்படம் ஒன்றும் தயாரித்துள்ளேன். எதிர்காலத் திட்டங்களும் ஏராளமாக இருக்கின்றன. நிச்சயம் அப்படைப்புகளும் சமூகப் பிரச்சினையை வெளிக்கொண்டுவரும் வகையில் காணப்படும்.

**இவ்ஆவணப்பட உருவாக்கத்துக்கு யாருக்கெல்லாம் நன்றி கூற நினைக்கின்றீர்கள்?**

இவ் ஆவணப்பட உருவாக்கத்துக்கான முதல் புள்ளி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதியும் ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ்.ரகுராம் சர் அவர்களுக்கு என்னுடைய மிகப்பெரிய நன்றிகள். ஆவணப்படத்தை தன் தோள் மீது சுமந்து இப்படைப்பைக் காட்சி வடிவில் மாற்ற ஒத்துழைப்பை வழங்கிய என்னுடைய அம்மாவுக்கும் பிற தேயிலைத் தோட்டப் பெண்களுக்கும் என்னுடைய நன்றிகள். சிறந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய ஊடக கற்கைகள் துறை விரிவுரையாளர்கள் மற்றும் நண்பர்களுக்கும், விசேடமாக இவ் ஆவணப்படம் தொடக்கம் முதல் இறுதி வரை என்னோட பயணித்த சுஜனுக்கும் என்னுடைய நன்றிகள்.

தொழில்நுட்பக் கருவிகளை வழங்கி உதவி செய்த சகோதரர் பிரதீபன் மற்றும் மில்ஹானுக்கும் என்னுடைய நன்றிகள். இப்பிரச்சினையை பேசுபொருளாக மாற்றிக் கொண்டிருக்கும் ஊடகங்களுக்கும் சமூக ஊடக நண்பர்களுக்கும் மற்ற அனைவருக்கும் மனம் நெகிழ்ந்த நன்றிகள்.

# நுவரெலியாவில் அபிநயஷேத்திரா குழு வழங்கிய தெய்வீக நாட்டிய நாடகம்



இராமாயண வரலாற்றுச் சிறப்புமிக்க புண்ணிய பூமியான நுவரெலியவிலுள்ள சீதா எலிய, சீதை அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராமர் – சீதா தேவி தெய்வீகத் திருக்கல்யாணமும் பட்டாபிஷேகமும் பக்தர்கள் நிறைந்து சூழ வெகு சிறப்பாக முதன் முறையாக நடைபெற்றது.



இதில் அபிநயஷேத்ரா நடனக் குழுவினர் 'தெய்வீகத் திருமணம்' எனும் நாட்டிய நாடகத்தைச் சமர்ப்பித்து, அனைவரதும் ஏகோபித்த அன்பையும் பாராட்டையும் பெற்றனர்.

கர்நாடகா ஸ்ரீ சந்திரவதன ஆசிரமத்தின் பீடாதிபதி உட்பட இந்திய இராமாயணக் குழுவினர், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், இந்திய உயர் ஸ்தானிகர் ஆலயப் பணிப்பாளர் பேராசிரியர் முனைவர் அங்குரான் தத்தா மற்றும் பல வெளிநாட்டுப் பக்தர்கள் என ஏராளமானவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மெய்சிலிர்த்துக் கண்ணீர் மல்க கலையர்ப்பணத்தை அபிநயஷேத்ரா குழு வழங்கியுள்ளமை பெருமைக்குரியது. அரும் வாய்ப்பளித்த ஆலயக் காப்பாளர் ஆதிமூலம், பொரவி நடராஜா, திருமதி பாரதி நடராஜன், ஆலய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார் அபிநயஷேத்ரா இயக்குநர் கலாசூரி திவ்யா சுஜேன்,

அம்ருதா சந்திரசேகர், பூமாலக்ஷ்மி அசோகன்,



அபிலாஷினி மகேந்திரகுமார், ரிஷிகேஷா செம்பையா, பிரித்திகா சஞ்சீஸ்குமார், ஆடல் கலைஞர்கள் திருமதி சுதா சத்தியநாதன், ஜெகநாதன் சஞ்சீவன், பதும் சாமர அகலிகையாக பாத்திரம் ஏற்று ஆடல் வழங்கிய பரிஸ் நாட்டின் சிரேஷ்ட நடன ஆசிரியர் திருமதி ரேணுகா சுரேஷ் ஆகியோர் பங்குபற்றிருந்தார்கள்.

சுவாதி

